**கவனிக்க.**- 01.06.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1762 - 2012 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2012.06.08

*1762 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மாஸ்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 64 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஹிஸ்புல்லாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) தென்னிலங்கை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தலைமைத்துவம் பயிற்சிப்பீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஏப்பிறல் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2012 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்- யூன்) புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூன் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூன் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். எஸ். தௌபீக் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''பரீரா முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த கல்லூரியைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) சமுதாயத்தை இஸ்லாமிய ஷரீஆ சட்டததின் அடிப்படையில் வழி நடத்தக்கூடிய ஆலிமாக்களை உருவாக்குதல்;

(2) இஸ்லாத்தைப் பேணிப் பாதுகாத்தல்.

பிறவும்.

எம். எஸ். தௌபீக்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திருகோணமலை மாவட்டம்.

6-310

---

## 'வைட் ரோஸ் பவுண்டேசன்' ஐ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கௌரவ விக்டர் அந்தனி பெரேரா, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நியதிக் கட்டளையினது 48 ஆம் இலக்க நியதிக் கட்டளையின் கீழ் இத்தால் தெரியப்படுத்தும் அறிவித்தல் யாதெனில், பின்வரும் பொதுவான குறிக்கோள்களைக் கொண்டதான 'வைட் ரோஸ் பவுண்டேஷன்'ஐ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' என்ற பெயரிலான சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என்பதேயாகும் :-

(1) நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் வசதி குறைந்த மக்களுக்கு, அவர்கள் தங்களது அடிப்படை தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி அளிப்பதன் மூலமும் தனிப்பட்ட வினைத்திறன்களில் பயிற்சியும் அவற்றில் அபிவிருத்தியும் உண்டு பண்ணுவதன் மூலமும், வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து அத்துடன் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதன் மூலமும் சமூக சேவைகளை அளித்தல்;

(2) குழந்தைகள், இளம் வயதினர் மத்தியில் அவர்களது மனநிலையிலும் உடல் ஆரோக்கியத்திலும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான கலைகளை அவர்கள் கற்றறிவதற்கான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் குழந்தைகள் மற்றும் இளையோர் வாழ்வில் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணல்;

(3) பல்வேறுபட்ட மனித ஆற்றல்களை கொண்டுள்ள தனிப்பட்வர்கள், அவற்றில் முழுமையான வளர்ச்சியடையும் வகையில், அவர்களுக்குத் தேவைப்படும் வாய்ப்புகளையும் நிதியுதவிகளையும் வழங்குதல் ;

(4) இளையோர் புதிய வினைத்திறன்களைக் கற்றுக் கொள்ளவும், வேலை செய்தவாறே பயிற்சிகளைப் பெறவும் வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் அவர்கள் தத்தமது சமூகப் பின்னனியிலேயே சிறிய அளவிலான வியாபாரங்களை நிறுவுவதற்கும் உதவியளித்தல்;

பிறவும்.

விக்டர் அந்தனி பெரேரா,
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

6-336

---

## பண்டகசாலை கருத்திட்டத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கௌரவ விக்டர் அந்தனி பெரேரா, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நியதிக் கட்டளையினது 48 ஆம் இலக்க நியதிக் கட்டளையின் கீழ் இத்தால் தெரியப்படுத்தும் அறிவித்தல் யாதெனில், பின்வரும் பொதுவான குறிக்கோள்களைக் கொண்டதான ''பண்டகசாலை கருத்திட்டத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' என்ற பெயரிலான சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என்பதேயாகும் :-

(1) நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் வசதி குறைந்த மக்களுக்கு, அவர்கள் தங்களது அடிப்படை தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி அளிப்பதன் மூலமும் தனிப்பட்ட வினைத்திறன்களில் பயிற்சியும் அவற்றில் அபிவிருத்தியும் உண்டு பண்ணுவதன் மூலமும், வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து அத்துடன் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்கு உதவியளிப்பதன் மூலமும் சமூக சேவைகளை அளித்தல்;

(2) நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சார்ந்த வருமானம் குறைந்த குடும்பங்கள் தங்களது அடிப்படை தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் வாழ்க்கைத் தரத்தை

உயர்த்திக் கொள்ளவும் தேவையான உதவிகளை அளித்தல்;

(3) வாழ்க்கையின் எல்லா துறைகளையும் அத்துடன் பல்வேறு பட்ட கலாசார, சமய பின்னணிகளையும் சார்ந்தவர்களான குழந்தைகளும் இளையோரும் ஐக்கியத்துடன் வாழும் வகையில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் சந்திப்பதற்கும் உறவாடுவதற்கும் கூடிய ஒரு அரங்கமாக ஆக்கபூர்வமான கலைகளைப் பயன்படுத்துதல்.

பிறவும்.

விக்டர் அந்தனி பெரேரா,
பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

6-337

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.